சுருக்கம்

சட்டக் கல்வி – 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, திருச்சிராப்பள்ளியில், இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சட்ட (சக)த்துறை

அரசாணை (நிலை) எண்.36

நாள் 30.01.2018.
ஹேவிளம்பி ஆண்டு – தை – 17.
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வி(ஜே2)த்துறை, நாள் 16.04.2010.
2. அரசு கடித எண்.8483/ஜே1/2010, உயர்கல்வித்துறை, நாள் 17.05.2010.
3. அரசு கடித எண்.9275/ஜே2/2010–1, உயர்கல்வித்துறை, நாள் 31.05.2010.
4. அரசாணை (நிலை) எண்.388, சட்ட(சக)த் துறை, நாள் 28.06.2013.
5. அரசாணை (நிலை) எண்.59, சட்ட(சக)த் துறை, நாள் 12.02.2016.
6. பதிவாளர் (பொ), தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்களின் கடித எண்.1188/2017, நாள் 13.03.2017 மற்றும் 19.07.2017.

* * * * *

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெறும், முதல் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் (Tuition Fee) சலுகை வழங்கி அரசால் ஆணையிடப்பட்டது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்சொன்ன கல்விக் கட்டணச் சலுகையை, 2010–2011 கல்வியாண்டு முதல் சென்னையிலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை நடைபெறவில்லையென்றாலும், சிறப்பு நேர்வாகக் கருதி, அப்பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., பி.எல் (ஹானர்ஸ்) சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டது. மேலும், மாண்புமிகு அமைச்சர் (சட்டம், நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் அறிவிப்பின்படி, இச்சலுகை, அச்சட்டப்பள்ளியில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பி.காம்., எல்.எல்.பி (சீர்மிகு), பி.பி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) மற்றும் பி.சி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) ஆகிய இளநிலை சீர்மிகு சட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு, மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்கள், மேலே விவரிக்கப்பட்ட அரசாணைகளில் வழங்கப்பட்டுள்ள கல்விக்கட்டணச் சலுகையை, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கும் வழங்குமாறு கேட்டுக்கொண்டு, அச்சட்டப் பள்ளியில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களின் விண்ணப்பங்களை தனது கடிதத்துடன் இணைத்தனுப்பியிருந்தார். தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியில் கல்விக் கட்டணம் (Tuition fees) ரூ.1 இலட்சம் ஆகும். எனவே, இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும் கல்விக் கட்டணச் சலுகை அளிக்கக் கருதும் பட்சத்தில், 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் 2016–2017–ஆம் கல்வியாண்டு வரையிலான கல்வியாண்டுகளுக்கு மொத்தம் 11 முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.29,00,000/– (ரூபாய் இருபத்து ஒன்பது இலட்சம் மட்டும்) கல்விக்கட்டணம் திருப்பி அளிக்க வேண்டிய நிலை உள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

4. பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்களின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை நடைபெறவில்லையென்றாலும், சிறப்பு நேர்வாகக் கருதி, 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் அப்பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கும், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்ட கல்விக் கட்டணச் சலுகையினை வழங்கிடவும், 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் 2016–2017–ஆம் கல்வியாண்டு வரையில், அப்பள்ளியில் பயின்று வரும் மொத்தம் 11 முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் செலுத்தியுள்ள ரூ.29,00,000/– (ரூபாய் இருபத்து ஒன்பது இலட்சம் மட்டும்) கல்விக்கட்டணத்தை மீள ஒப்பளிப்பு செய்திடவும் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கிடும் போது, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் அவர்களுக்கு பொருந்தக் கூடிய நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். மேலே அவ்வரசாணை தொடர்பாக மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதங்களில் வெளியிடப்பட்ட தெளிவுரைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4–இல் உள்ள திட்டத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> “2202 பொதுக் கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 107 படிப்புதவித் தொகைகள் – மாநிலச் செலவினங்கள் – JH. சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான கல்வி கட்டணத்தை திருப்பி அளித்தல் – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (த.தொ.கு.2202–03–107–JH–1296).”.

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2017–2018–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017–2018–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(உள்–II)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates – 2017-2018) சேர்த்திட சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–இல் மீள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை, அரசின் கணக்கிலிருந்து பெற்று வழங்க, சட்டக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண்.1966/உள்–II/2018, நாள் 24.01.2018–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.2561 (இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்து ஒன்று) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, திருச்சிராப்பள்ளி – 620 009.
3. சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 035.
4. மாநில கணக்காய்வாளர், சென்னை – 600 018/600 035.

நகல்:

1. மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. மாண்புமிகு அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
4. உயர்கல்வித் துறை/நிதி (உள்II/வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
5. இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.